**செய்தி வெளியீடு எண் : 949** **நாள்: 11.06.2022**

## செய்தி வெளியீடு

**கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (11.6.2022) சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.90.59 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு பணிகளை தொடங்கி வைத்து, ஜகன்நாதன் தெருவில் ரூ.49.62 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மின் கோட்ட உதவி பொறியாளர் அலுவலகக் கட்டடத்தையும், ஜவஹர் நகரில் புதுப்பிக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தையும் திறந்து வைத்து, ஜகன்நாதன் தெருவில் ரூ.25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை நவீன வசதிகளுடன் மேம்படுத்துவதற்காக பிரான்ஸ் மேம்பாட்டு முகமை நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் புதுமைப்படுத்துதல், ஒருங்கிணைத்தல் மற்றும் நிலைத்திருத்தலுக்கான நகர முதலீடுகள் (City Investments to Innovate Integrate and Sustain) திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியின் திரு.வி.க.நகர் மண்டலம், மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.90.59 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, ஜகன்நாதன் தெருவில் மூலதன நிதியின்கீழ் ரூ.49.62 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மின் கோட்ட உதவி பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தும், ரூ.25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

பின்னர், ஜவஹர் நகரில் புதுப்பிக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப் பை, நோட்டுப் புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்களையும், பயனாளிகளுக்கு மருத்துவ உதவிகள், 4 சக்கர தள்ளு வண்டிகள், மீன்பாடி வண்டிகள், திருமண நிதியுதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

முன்னதாக, எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 250 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்களையும், அனிதா Achievers Academy-ல் தையல் பயிற்சி முடித்த 349 மகளிர்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கலாநிதி வீராசாமி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.விஜயராஜ்குமார், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in